பழனியில் நீர்மின் திட்டம்

*வினா எண். 321—திரு. என். பழனிவேல் : மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) நீர்மின் நிலையம் பழனியில் ஏற்படுத்தும் திட்டம் அரசுக்கு உண்டா ?

(ஆ) ஆம் என்னில், அதனால் ஆண்டொன்றுக்கு எத்தனை கிலோவாட் மின்சாரம் கிடைக்கும் ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) ஆம். பழனிக்கு அருகே சண்முகா நதிநீர்மின் திட்டம் அமைக்க கருத்துரு உள்ளது.

(ஆ) இதனால் ஆண்டொன்றுக்கு 125 மில்லியன் யூனிட்டுகள் மின்சாரம் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. என். பழனிவேல் : மாண்புமிகு தலைவர் அவர்களே, பழனி அருகே உள்ள சண்முகா நீர்மின் நிலையத் திட்டத்தினுடைய வேலைகளுக்காக சுமார் 1 வருட காலமாக அங்கே ஒரு அலுவலகம் இருந்து செயல்பட்டுக் கொண்டு வந்தது. சமீபத்தில் 3 மாதங்களுக்கு முன்னால் அந்த அலுவலகம் அங்கிருந்து மாற்றப்பட்டு மேட்டூருக்குக் கொண்டு சென்றிருப்பதாகச் சொல்கிறார்கள். அதனுடைய விவரம் என்ன என்பதை அமைச்சர் அறிவிப்பாரா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, இத்திட்டம் மத்திய அரசின் ஆய்வில் உள்ளது. இந்தத் திட்டம் அமராவதி ஆற்றுப் படுகையிலே வருகிறது. அதனாலே, அது காவேரி ஆற்றுப் படுகையின் பிரச்னையோடு இணைக்கப்பட்டு இந்திய அரசு இந்தத் திட்டத்திற்கு கேரள அரசினுடைய சம்மதத்தையும் கர்நாடக அரசினுடைய சம்மதத்தையும் பெற வேண்டுமென்று தெரிவித்துள்ளது. தமிழக அரசின் சார்பில் இந்தத் திட்டத்தைப் பொறுத்தவரையில் இதன் நீர்ப்பிடிப்பு பகுதிகள் முழுவதுமே தமிழக எல்லைக்குள் இருக்கின்ற காரணத்தினால், இதைக் காவேரி நீர்த் தகராறோடு இணைக்க வேண்டிய அவசியம் இல்லையென்று மத்திய அரசுக்குத் தெரிவித்து இருக்கிறோம். அதனால் தான் தாமதம்.

திரு. என். பழனிவேல் : தலைவர் அவர்களே, நான் கேட்பது, இந்த அலுவலகம் ஏற்கனவே ஓராண்டுக்காலமாக அங்கே செயல்பட்டுக்கொண்டிருந்ததே, செயல்பட்டுக்கொண்டிருந்ததை திடீரென்று மாற்றிவிட்ட காரணத்தால் இந்தத் திட்டமே

1981 மார்ச் 2]

விடப்பட்டுள்ளதோ என்று அச்சம் அந்தப் பகுதியிலே ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, மத்திய சர்க்கார் இந்தத் திட்டத்தை ஏற்பதில் சிக்கல் ஏதாவது இருப்பதாகச் சொல்லியிருக்கிறதா என்றுதான் நான் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : சிக்கல் இருக்கிறது. அதைத்தான் சொன்னேன். அங்கே அலுவலகம் இருந்து அலுவல்கள் இல்லாமல் இருந்திருப்பார்களேயானால், அவர்களை வேறு இடத்திற்கு மாற்றியிருப்பார்கள். ஆனால், திட்டத்தைக் கைவிடுகின்ற உத்தேசம் இல்லை.

திரு. என். வரதராஜன் : தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் மிகக் கடுமையான மின் தட்டுப்பாட்டால் நம்முடைய விவசாயமும் தொழிலும் நெருக்கடியில் சிக்கியிருக்கக்கூடிய இந்தச் சூழ்நிலையில், ஒகேனக்கல்லில் ஏற்கனவே நாம் மின் நிலையம் கட்ட வேண்டுமென்ற திட்டத்தை 10 ஆண்டுகளாக நிறைவேற்ற முடியவில்லை. பழனிக்கருகிலும் கட்ட முடியாமல் நிறுத்தப்பட்டிருக்கிறது. வேறு சில மாநிலங்களில் மத்திய அரசாங்க அனுமதியில்லாமலே நிறைவேற்றியிருக்கும்போது, இங்கும் இந்தத் திட்டத்திற்கு அனுமதி கிடைக்கும், கிடைக்கும் என்று எதிர்பார்ப்பது சரிதானா? மதுரை மாவட்டத்தில், திண்டுக்கல், பழனி போன்ற பகுதிகளில் மின்வெட்டு அதிகமாக இருக்கும் போது, அதை நிறைவேற்ற வேண்டாமா? அதுபற்றி அரசினுடைய உத்தேசம் என்ன என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரின் உணர்வுகளை நான் வரவேற்கிறேன். இந்தத் திட்டம் மிகத் தேவையான திட்டம். அதனாலேதான் அண்மையில் நமது முதல்வர் அவர்கள் டெல்லிக்குச் சென்ற பொழுது மத்திய மின்சாரத் துறை அமைச்சரிடத்திலே இது பற்றி எடுத்து விளக்கினார்கள். மத்திய மின்சாரத் துறை அமைச்சர் விரைவில் இந்த 3 மாநிலங்களின் முதலமைச்சர்களைச் சந்தித்து, எந்த எந்தத் திட்டங்கள் இப்படி காலதாமதப் படுகின்றனவோ அந்தத் திட்டங்களையெல்லாம் பேசி விரைவில் முடிவு காணலாம் என்று தெரிவித்து இருக்கிறார்கள். அது சம்பந்தமாக, மத்திய அரசு விரைவில் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று வற்புறுத்துகிறோம். அதற்குப் பிறகு, மாண்புமிகு உறுப்பினர் சொன்னார், நாமே ஏன் கட்டிக்கொள்ளக் கூடாது என்று. நாம் இன்னும் ஒற்றுமையில் நம்பிக்கை வைத்திருக்கிறோம்.

திரு. ஏ. பாலுச்சாமி : தலைவர் அவர்களே, பழைய தி.மு.க. ஆட்சியில் ஏலம் விடப்பட்ட சமயநல்லூர் மின் திட்டத்தை மீண்டும் . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மூலக் கேள்வியை ஒட்டிக் கேட்க வேண்டும். சமயநல்லூர்பற்றி இப்போது கேட்கக் கூடாது.

திரு. என். பழனிவேல் : தலைவர் அவர்களே..........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்களுக்கு எற்கெனவே இரண்டு கேள்விகள் அனுமதித்து விட்டேன். மறுபடியும் வாய்ப்பு தர முடியாது. (குறுக்கீடு). மற்றவர்கள் கேட்க வில்லை என்பதற்காக உங்களுக்கு வாய்ப்பு தர இயலாது. முறைகளை மாற்றிக்கொள்ள நான் தயாராக இல்லை. அமைச்சர் அனுமதித்தாலும் நான் அனுமதிப்பதற்கில்லை.

விவசாயக் கிணறுகளுக்கு மின் இணைப்பு.

*வினா எண். 322—திரு. வெ. அரங்கராசன் : மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா :

(அ) வரிசைப்படி மின் இணைப்பு விவசாயக் கிணறுகளுக்கு கொடுக்கும் திட்டத்தில் ஒரு கிணறுக்காக பல கம்பங்களைப் போட்டு ஒரு டிரான்ஸ்பார்மர் வைத்து மின் இணைப்பு கொடுப் பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அப்படி புதிய டிரான்ஸ்பார்மர் வைத் துள்ளதில் மற்ற கிணறுகளுக்கு வரிசை பாராமல் (Seniority) மின் இணைப்பு கொடுக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) ஆம்.

(ஆ) இயலாது ; மனுச் செய்த தேதியின் அடிப்படையில் தான் மின் இணைப்புக் கொடுக்க முடியும்.

திரு. வெ. அரங்கராசன் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முடியாது எனவும், வரிசைப்படி தான் கொடுக்க முடியும் என்றும் கூறியிருக்கிறார்கள். ஒரு கிணற்றுக்கு மின்சார இணைப்பு கொடுக்கும்போது வரிசையாக 6 கம்பங்கள் 10 கம்பங்கள் 15 கம்பங்கள் போட்டு ஒரு டிரான்ஸ்பார்மர் வைக்கின்றபோது லட்சக்கணக்கில் செல வாகின்றது. அப்படி வரிசையாக வருகின்றபோது 10 ஆண்டுகள் கழித்துத்தான் வரக்கூடிய நிலை இருக்கிறது. இந்த 10 ஆண்டுகளில் அந்த டிரான்ஸ்பார்மர் போட்டு மோட்டார் ஓட்டு